## கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.

## M.C.O.P.No.244/2018

22025ஆம் வருடம் நவம்பர் மாதம் 24ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு .ஹரிஹரன் (எ.ம.சா.1) | தொழில் | : இளநிலை உதவியாளர். வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், பழனி |
| த/பெ. | : திரு. சுரேந்திரன் | வயது | : 23 |
| க/பெ. | : திரு. | | |
| கிராமம் | : பழனி | இனம் | : ஆண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 24.11.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>**முதல் விசாரணை :–**</u>

நான் பழனி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். பழனி வட்டாரப் போக்குவரத்து அலுவலருக்கு வந்த அழைப்பாணையின்படி அவர் எனக்கு சாட்சியமளிக்க அதிகாரக் கடிதம் வழங்கியுள்ளார். அதிகாரக் கடிதம் எ.ம.சா.ஆ.1. மோகன்குமார் த/பெ.சுப்பையா, 24 போஸ்ட் ஆபீஸ் ரோடு, Near State Bank, Palani Town என்பவருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது என்பதற்கு அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. எங்களுடைய கணினி மற்றும் ஆவணங்களைத் தேடிப்பார்த்ததில் அவருக்கு எவ்வித ஓட்டுனர் உரிமமும் வழங்கப்படவில்லை. இது குறித்து தேடுதல் செய்ததற்கான குறிப்பு எ.ம.சா.ஆ.2. மேற்படி முகவரியில் கண்ட நபர் ஓட்டுனர் உரிமம் எடுக்கவேண்டும் என்றால் எங்கள் அலுவலகத்தில்தான் ஓட்டுனர் உரிமம் பெறவேண்டும் என்றால் சரிதான்.

<u>**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**</u> **:–**

மோகன்குமார், த/பெ. சுப்பையா என்பவரின் பழனி முகவரியில்தான் தேடுதல் செய்தோம் என்றால் சரிதான். அவருக்கு வேறு மாவட்டம் அல்லது

**வேறு மாநிலத்தில் ஓட்டுனர் உரிமம் இருந்தால் எங்கள் அலுவலக கோப்பில் இருக்காது என்றால் சரிதான்.**

**<u>மறு விசாரணை</u> :- இல்லை.**

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2025.11.24 18:22:47 +0530

Additional Sub Judge,
Palani.